செ.வெ.எண். 51 நாள்: 23.07.2019

**வேப்பனப்பள்ளி ஒன்றியம் போலுப்பள்ளி ஊராட்சி என்னேக்கோல் ஜெட்ஏரியில் நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் கெப் இன்பரா தொழிற் நிறுவனம் சார்பாக தூர் வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 23.07.2019) துவக்கி வைத்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியம் போலுப்பள்ளி ஊராட்சி என்னேக்கோல் ஜெட்ஏரியில் நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் கெப் இன்பரா தொழிற் நிறுவனம் சார்பாக தூர் வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 23.07.2019) துவக்கி வைத்தார். தொடர்ந்து பிச்சுகொண்டபெத்தனப்பள்ளியில் வாங்கிலி நிறுவனம் சார்பாக துார் வாரும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போது:**

நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர் மேலாண்மைத் திட்டம் ( ஜெல்சக்தி அபியான்) திட்டத்தின் கீழ் ஏரிகள், குளங்கள் மற்றும் நீர் நிலைகளை துார்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடக்கிழக்கு பருவ மழை எதிர் நோக்கி உள்ள நிலையில் நீர் நிலைகளில் மழை நீரை சேமிக்கும் பொருட்டு தொழில் நிறுவனங்கள், மற்றும் பல்வேறு அமைப்புகள் மூலம் மாவட்டம் முழுவதும் 150 ___ க்கும் மேற்பட்ட ஏரிகளில் துார் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. துார் வாரும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஏரி கரைகள் உயர்த்தியும், தாழ்வான பகுதிகளை கண்டறிந்து அதிக அளவில் மழை நீரை சேமிக்கவும், குளம் குட்டைகள் மற்றும் ஏரிகளுக்கு வரும் நீர் வரத்து கால்வாய்கள் துார் வாரும் பணிகள் நடைபெறுகிறது.

இன்று போலுப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட என்னேக்கோல் ஜெட் ஏரி 17.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரி கெப் இன்பரா தொழிற் நிறுவனம் சார்பாக ரூ. 1 லட்சத்து 95 ஆயிரம் மதிப்பில் துார் வாரும் பணிகள் இன்று துவக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை தரமாகவும், மழைநீர் சேமிக்கும் பொருட்டு கரைகளை உயர்த்தியும், நீர் வரத்து கால்வாய்கள், நீர் வெளியேறும் பகுதிகளை நல்ல முறையில் துார் வாரி பணிகளை முடிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கடந்த வாரம் வாங்கிலி நிறுவனம் சார்பாக 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட பிச்சுகொண்ட பெத்தனப்பள்ளி ஏரி துார் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இன்று நேரில் பார்வையிட்டு மழை நீர் சேமிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குளம் மழை நீர் வரத்து கால்வாய்கள் துார் வாரப்பட்டதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கெப் இன்பரா நிறுவன தலைமை நிர்வாக அலுவலர்கள் திரு.லுாயிஸ் அம்ரோஸ், திரு.ரமேஷ், பாதுகாப்பு அலுவலர் திரு. சக்திவேல், நிர்வாக பொறுப்பாளர்கள் திரு.யயாதி, திரு.ஜோசன், திரு.அருள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.மோகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வேடியப்பன், திரு.ராமசந்திரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கோவிந்தராஜ், திரு.முகிலன், பணி மேற்பார்வையாளர்கள் திரு.திருவேங்கடம், திரு.நாகராஜ், மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.